இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 04.04.2026

# கொள்கை உறுதிமொழி!

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் மிக மிக முக்கியமானது கொள்கை உறுதிமொழி ஆகும். ஐம்பதுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் துறை வாரியாக பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு அரசாங்கம் அமையும் போது, அந்த அரசின் சார்பில் நிறைவேற்றப்படும் வாக்குறுதிகளாக அவை அமைந்துள்ளன. அவை அனைத்தும் தேர்தல் வாக்குறுதிகள். ஒரு அரசியல் இயக்கத்துக்கு மிக அடிப்படையானது கொள்கை உறுதிமொழி ஆகும். அதன் அடிப்படையில் தான் அந்த இயக்கத்தை அளவீடு செய்ய வேண்டும். அந்த இயக்கத்தின் உண்மையான பலம் என்பதும் அதுதான். எனவேதான், தேர்தல் அறிக்கையின் முகப்பிலேயே கொள்கை உறுதிமொழியை கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வடித்துத் தந்துள்ளார்கள்.**

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞர் வழித்தடத்தில் இக்கொள்கை உறுதிமொழியை உருவாக்கி இருக்கிறார் தலைவர், மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் உருவான நாளன்றே இக்கொள்கை அடித்தளத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கித் தந்தார்கள்.

**"திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது, திராவிடர் கழகத்துக்குப் போட்டியாக அல்ல. அதே கொள்கைப் பாதையில்தான் திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளின் மீதேதான் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. சமுதாயத் துறையிலே சீர்திருத்தம், பொருளாதாரத் துறையிலே சமதர்மக் குறிக்கோள், அரசியலில் வடநாட்டு ஏகாதிபத்தியத்தினின்று விடுதலை ஆகிய கொள்கைகள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடுகளாகும்" என்று தெளிவுபடுத்தினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.**

கருப்பு, சிவப்புக் கொடிக்கான விளக்கமே கொள்கை விளக்கம் ஆகும்.

★ அரசியல், பொருளாதார, சமுதாய வாழ்விலுள்ள இருண்ட நிலையை உணர்த்தி நிற்கும் அறிகுறியே கருப்பு -

அம்மூன்று துறைகளிலும் உள்ள இருண்ட நிலையைப் போக்கி ஒளிநிலையை உண்டாக்க வேண்டும் என்பதன் அடையாளமே சிவப்பு - என்று வரையறை செய்யப்பட்டது.

அறநெறி அரசியலுக்காகவும் -

பேதமற்ற சமுதாய அமைப்புக்காகவும்-

சமதர்மத்துக்காகவும் - பாடுபடும் உறுதி கொண்ட தி.மு. கழகம் என்று 1967 தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் மறைவுக்குப் பிறகு கூடிய 1971 திருச்சி மாநாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ஐம்பெரும் முழக்கங்களை வடித்துக் கொடுத்தார்கள்.

★ **அண்ணா வழியில் அயராது உழைப்போம்!**

★ **ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்!**

★ **இந்தித்திணிப்பை என்றும் எதிர்ப்போம்!**

★ **வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்!**

★ **மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி!**

- ஆகிய ஐந்து முழக்கங்களுக்குள் அனைத்துமே அடங்கியுள்ளது. அவர் வழிவந்த தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 2018 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் நாள் ஈரோட்டில் நடந்த மண்டல மாநாட்டில் தனது ஐம்பெரும் முழக்கங்களை அறிவித்தார்கள்.

★ **கலைஞரின் கட்டளையைக் கண்போல் காப்போம்!**

★ **தமிழரை வளர்த்து தமிழைப் போற்றுவோம்!**

★ **அதிகாரக் குவியலை அடித்து நொறுக்குவோம்!**

★ **மதவெறியை மாய்த்து மனிதநேயம் காப்போம்!**

★ **வளமான தமிழகத்தை வளர்த்தெடுப்போம்!**

- ஆகிய ஐம்பெரும் முழக்கங்களில் அடுத்த கட்டப் பாதைகள் அமைந்திருந்தன. இத்தகைய கொள்கை வழித்தடத்தில் மாறாமல் இன்றைய கொள்கை உறுதிமொழியும் அமைந்துள்ளது.

★ அரசியலில், ஜனநாயக உரிமைப் பாதுகாப்பு - பொருளாதாரத் துறையில், ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ நிலை - எல்லோருக்கும் நல்வாழ்வு கிடைத்திட சமதர்மம், சமூகத்துறையில், பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சியும் பேதமற்ற சமூக அமைப்பும் ஏற்படுத்துவதற்கான முறைகளை மேற்கொள்வது என்று உறுதி அளிக்கிறது.

★ தமிழைக் காப்பதும், உரிமை பெற்ற பேரினமாய் தமிழினத்தை வளர்ப்பதும், தன்னிறைவு பெற்ற தமிழ்நாட்டை உருவாக்குதலும்தான் நமது மாபெரும் இலக்குகள்!

★ தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலம் ஆக்குவதும், உலகில் குறிப்பிடத்தக்க பகுதியாக உயர்த்துவதும்தான் நமது நோக்கம்!

★ இந்திமொழித் திணிப்பு என்பது ஒற்றை மொழி ஆதிக்க நடவடிக்கையாக அமைந்திருப்பதால் அதனை முழு மூச்சாக எதிர்க்கிறோம்!

★ இந்திய மாநில மொழிகள் அனைத்தும் ஆட்சிமொழி ஆக்கப்பட வேண்டும்!

★ ஒன்றிய அரசின் அதிகாரங்களுக்கும் வரி விதிப்பு உரிமைகளுக்கும் வரம்பு நிர்ணயிக்கும் வகையில் இந்திய அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும்!

★ ஒன்றிய அரசின் அரசியல், சமூக, பொருளாதார முடிவுகள் அனைத்தும் மாநிலங்களைப் பாதிப்பதால், மாநில அரசுகளின் ஆலோசனைகளைப் பெற்ற பிறகே ஒன்றிய அரசு அந்த முடிவுகளை எடுக்க வேண்டும்!

★ தமிழர்களைப் பிளவுபடுத்தும் சாதிப் பிரிவினைகள், வகுப்புவாதம் உள்ளிட்ட பேதங்கள் நமது வளர்ச்சிக்குப் போடப்படும் விலங்குகள். ஆகவே, சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளுக்கும் முற்போக்கு எண்ணங்களுக்கும் உரிய முக்கியத்துவம் அளித்துத் தொடர்ந்து செயல்படுவோம்!

★ மதச்சார்பற்ற தன்மைக்குப் புறம்பாக எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் நிராகரிப்போம்!

★ சமத்துவம், சமூகநீதி, சகோதரத்துவம், பகுத்தறிவு, சுயமரியாதை ஆகிய கோட்பாடுகளை மக்கள் மனதில் விதைத்து, அதற்கேற்ப சட்டங்களை இயற்றி மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதே நமது நோக்கம்!

★ "எல்லார்க்கும் எல்லாம்" என்பதே திராவிடவியல் கோட்பாடு என்று கழகத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நமக்கு வகுத்துத் தந்துள்ளார். தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும்பின்தங்கவிடமாட்டேன்என்றஅவரதுஉறுதிமொழியைக் காக்க எந்நாளும் உழைப்போம்.

**- திராவிட முன்னேற்றக் கழகத்தின் பலம் என்பது இத்தகைய கொள்கை உரமும், இக்கொள்கையைத் தாங்கிய தொண்டர்களின் நெஞ்சுரமும்தான்.**



திருவாரூரில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவாரூர் சோமாஸ்கந்தன் எழுதிய 'வழிகாட்டும் திராவிடம்' என்ற நூலினை வெளியிட கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் பெற்றுக் கொண்டார். உடன் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச் செயலாளர்கள் பூண்டி எஸ்.கலைவாணன், நாகை எஸ்.கௌதமன், எஸ்.டி.பி.ஐ. கட்சி மாநிலத் தலைவர் முபாரக், 'தாட்கோ' தலைவர் இளையராஜா ஆகியோர் உள்ளனர்.

### தலைமை அரசு குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா ஆணித்தரமான வாதம்!

# அமைச்சரவையின் பரிந்துரைகளை ஆளுநர் தன்னிச்சையாக நிராகரிக்க முடியாது!

## சென்னை உயர் நீதிமன்ற மூன்று நீதிபதிகள் அமர்வு பரபரப்பு தீர்ப்பு!

*சென்னை, ஏப். 4 -* பல ஆண்டுகளாக சிறையிலிருக்கும் தண்டனை கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்யும் தமிழ்நாடு அமைச்சரவையின் பரிந்துரைகளை ஆளுநர் நிராகரித்ததின் அடிப்படையில் போடப்பட்ட உத்தரவுகளை எதிர்த்து பல்வேறு வழக்குகள் சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குகள் நீதிபதிகள் எம் எஸ்,ரமேஷ் மற்றும் லட்சுமி நாராயணன் ஆகியோர் அடங்கிய டிவிஷன் பெஞ்ச் முன்பு கடந்த ஆகஸ்ட் மாதம் விசாரணக்கு வந்தது. அப்போது, இரண்டு நீதிபதிகள் அடங்கிய இரு வேறு தீர்ப்புகள் மாறுபட்ட உத்தரவுகளை பிறப்பித்திருப்பதால், அதனை மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிக்க தலைமை நீதிபதிக்கு கீழ்க்கண்ட கேள்விகளை எழுப்பி, பரிந்துரை செய்திருந்தனர்.

1.தண்டனை குறைப்பு மற்றும் முன் கூட்டியே விடுதலை செய்யும் அரசின் அமைச்சரவை முடிவுக்கு கவர்னர் கட்டுப்பட்டவரா?

2.மேற்கண்ட வழக்குகளில் எந்தெந்த சூழல்களில் அமைச்சரவையின் முடிவுக்கு கட்டுப்படாமல் ஆளுநர் தன்னிச்சையாக செயல்பட முடியும்?

இந்த வழக்கு கடந்த வாரம் நீதிபதிகள் ஏ.டி. ஜெகதீஷ் சந்திரா, ஜி.கே. இளந்திரையன் மற்றும் சுந்தர் மோகன் அடங்கிய மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன், மனோகரன், சைஃபுல்லா உள்ளிட்டோர் ஆஜரானார்கள்.

அரசு தரப்பில் மாநில தலைமை அரசு குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னா ஆஜராகி "அரசியலமைப்பு ஷரத்துகளின் படி ஆளுநர் அமைச்சரவையின் அறிவுரையின்படி மட்டுமே செயல்பட முடியும் என தெரிவித்துள்ளது. உச்ச நீதிமன்ற ஏழு நீதிபதிகள் கொண்ட ஷம்ஷேர் வழக்கின் தீர்ப்பின் படி கவர்னர் நிர்வாக செயல்பாடுகளில் தனிப்பட்ட முறையில் முடிவெடுக்க முடியாது, அமைச்சரவையின் ஆலோசனை மற்றும் பரிந்துரையின் படியே செயல்பட முடியும் என உறுதிபடுத்தியுள்ளது.

**உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு!**

அதே போன்று உச்சநீதிமன்ற ஐந்து நீதிபதிகளைக் கொண்ட அரசியல் சாஸன அமர்வான மரு ராம் வழக்கில் ஆளுநர் பெயரளவிலான தலைவர் ( *Symbolic Head*) மட்டுமே. மு ன்கூட்டியே விடுதலை செய்யும் அமைச்சரவையின் முடிவுகளில் ஆளுநர் ஒப்புதலின்றி கூட அரசு உத்தரவு போட முடியும் என கூறியுள்ளது. இவை அனைத்தையும் பேரறிவாளன் வழக்கில் உச்ச நீதிமன்றம் பின்பற்றியுள்ளது. எனவே ஆளுநர் முன் கூட்டியே விடுதலை செய்யும் அமைச்சரவையின் முடிவை நிராகரிக்க அதிகாரம் இல்லை என வாதிட்டார்.

மனுதாரர் வழக்கறிஞர்களும் இதே கருத்தை முன் வைத்தனர். அனைவரது வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் தேதி குறிப்பிடாமல் தீர்ப்பை ஒத்தி வைத்தனர்.

**மூன்று நீதிபதிகள் தீர்ப்பு!**

நேற்று முன்தினம் (2.4.2026) இந்த வழக்கின் தீர்ப்பினை நீதிபதிகள் ஏ.டி. ஜெகதீஷ் சந்திரா, ஜி.கே.இளந்திரையன் மற்றும் சுந்தர் மோகன் அடங்கிய மூன்று நீதிபதி கள் "தண்டனை குறைப்பு மற்றும் முன் கூட்டியே விடுதலை செய்யும் அரசின் அமைச்சரவை முடிவை ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் தன்னிச்சையாக முடிவெடுக்கும் அதிகாரம் ஆளுநருக்கு கிடையாது. ஆளுநர் அமைச்சரவையின் முடிவுக்கு கட்டுப்பட்டவர் என தீர்ப்பளித்தனர்.

### 5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சியின் சாதனைகள் மேலும் தொடர்ந்திட

# தி.மு.க. அணியின் வெற்றிக்கு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி பணியாற்றும்!

## விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் அறிக்கை!



*சென்னை, ஏப்.4* தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த ஐந்தாண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத்திட்டங்கள், அதன் மூலம் அடைந்திருக்கிற இரட்டை இலக்கு பொருளாதார வளர்ச்சி போன்றவை தொடர்ந்து, தமிழ்நாட்டை மேலும் அடுத்த நிலைக்கு கொண்டு சென்றிட திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைவது அத்தியாவசியத் தேவையாகிறது.

எனவே விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சிக்கு தொகுதி ஒதுக்கீடு செய்யவில்லை என்கிற மன வருத்தத்தை ஒதுக்கிவிட்டு, மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைந்திட தமிழ்நாடு முழுவதும் திமுக தலைமையிலான அணி வெற்றி பெற்றிட விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியினர் களப்பணி ஆற்றிட வேண்டும்.

கலைஞர் மகளிர் உரிமை திட்டம், கட்டணமில்லா விடியல் பயணம், காலை உணவு திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், கலைஞர் கனவு இல்லம், வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை, கட்டுமானத் தொழிலாளர் உள்ளிட்ட அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான புதிய திட்டங்கள் போன்ற இந்திய நாடே பின்பற்றக்கூடிய சிறப்பானத் திட்டங்களை அறிவித்து அதனை கடந்த 5 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியால் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனால் தமிழ்நாட்டின் பல தரப்பு மக்களும் பயன்பெற்று வருகின்றனர். கல்வி, மருத்துவம் போன்றவற்றில் தலை சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. பெண் தொழிலாளர்கள் அதிகம் பணிபுரியும் மாநிலமாக உயர்ந்துள்ளது. கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் உள்ளிட்ட பல்வேறு வாரியங்களில் பல்வேறு புதியதுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டும் நலத்திட்ட உதவிகள் உயர்த்தப்பப்பட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதனால் கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் சுமார் 38 லட்சம் தொழிலாளர்கள் நல வாரியங்களில் புதிதாக பதிவுப் பெற்று சாதனை படைக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சாதனைகளால் தமிழ்நாடு 11.19 சதம் என்ற இரட்டை இலக்கை அடைந்து இந்தியாவின் உயரிய பொருளாதார வளர்ச்சி அடைந்த மாநிலமாக நிமிர்ந்து நிற்கிறது.

இந்த சட்டப்பேரவைத் தேர்தலில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சிக்கு தொகுதி ஒதுக்கீடு செய்யப்படும் என்ற நம்பிக்கை நமக்கு இருந்தது. ஆனால் அதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அந்த வருத்தம் அடிமட்ட தொண்டர் வரையில் இருப்பது இயல்பே. இருந்தாலும் நாட்டின் நலன் மற்றும் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, அந்த வருத்தத்தை ஒதுக்கி வைத்து விட்டு, திராவிட மாடல் ஆட்சி மீண்டும் அமைந்து, முதலமைச்சராக தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று, மேற்படி பணிகள் தொடர்ந்திட அனைத்து நிர்வாகிகளும் களப்பணி ஆற்றிட வேண்டும்.

குறிப்பாக நல வாரியத்தின் மூலம் பயன்பெற்ற லட்சக்கணக்கானத் தொழிலாளர்கள் இல்லங்கள் தோறும் சென்று, திண்ணைப் பிரச்சாரம் மேற்கொண்டு, வாக்குகளை இந்த அணிக்கு கொண்டு வந்து சேர்த்திட வேண்டும். நான் தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. அணியின் வெற்றிக்கு வாக்கு சேகரிக்க உள்ளேன்.

இவ்வாறு பொன்குமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், மேற்கு தொகுதி சட்டமன்ற வேட்பாளருமான கே.என். நேரு காஜாமலை பகுதியில் உள்ள அரபிக் கல்லூரியில் முதல்வர் மற்றும் ஹஜ்ரத் மார்களை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்த போது எங்களது ஆதரவு கண்டிப்பாக உங்களுக்கு தான் என்று இஸ்லாமியப் பெருமக்கள் உறுதி அளித்தனர் உடன் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், செயற்குழு உறுப்பினர் காஜாமலை விஜய், பகுதி செயலாளர் கமல் முஸ்தபா உட்பட பலர் உடன் இருந்தனர்.



திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கேயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வெள்ளகோவில் நகர கழக அலுவலகத்தில் த.வெ.க., அ.தி.மு.க., மற்றும் பா.ஜ.க. உள்ளிட்ட மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் அக்கட்சிகளில் இருந்து விலகி கழக வேட்பாளர், கழக துணைப் பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.